**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.4/2025 அதன் ஆர்.எல்.டி.ஓ.பி.எண்.3/2023**

ஆயிஷா பீவி ... மனுதாரர்/வாடகைதாரர்

–எதிர்–

அஹம்மது ஆதம் ... எதிர்மனுதாரர் / நிலச்சுவான்தாரர்

இம்மனு என்முன்பாக 08.08.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.நௌசாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செல்வகணபதி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு, இரு தரப்பு ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களை மனுதாரர்/வாடகைதாரர் தரப்பு ஆவணமாக ஏற்றுக் கொள்ள உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 8, விதி 3 ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2).மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் மனுதாரர் அசல் மனுவின் எதிர்மனுதாரர் என்றும், மனு தபசில் சொத்திலிருந்து மனுதாரர்/ எதிர்மனுதாரரை காலி செய்து, அதன் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்/மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டி அசல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் மனுவானது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரருக்கு மனு தபசில் சொத்திற்கான வாடகையை மாதம், மாதம் வங்கி

வரவோலை எடுத்து அனுப்பி வைத்ததற்கான வங்கி செல்லான் மற்றும் எதிர்மனுதாரர் மேற்படி வாடகை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அட்டைகள் மற்றும் வரைவோலை மூலம் வாடகை அனுப்பியதற்கான வங்கி கணக்கு பட்டியல் ஆகியவை இந்த வழக்கில் முக்கியமான ஆவணங்கள் என்பதால், மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், மேற்படி ஆவணங்களை விசாரணையின் போது தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, மேற்படி ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் எனக்கூறி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) எதிருரை சுருக்கம்</u>**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், அசல் மனுவானது 13.03.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் மனுதாரருக்கு நன்கு தெரிந்து, வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்நிலையில், மனுதாரர் 2 வருடங்களாக தாக்கல் செய்யாத ஆவணங்களை தற்போது எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்ததற்கு எந்தவிதமான ஏற்றுக் கொள்ளத்தக்க காரணங்களையும் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ளது.

4) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியம் எதுவும் இல்லை. சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை

5) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு மனுவில் கண்ட ஆவணங்களை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணமாக குறியீடு செய்ய அனுமதிக்க முகாந்திரம் உள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6) இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) இம்மனுவின் மனுதாரர் அசல் மனுவின் எதிர்மனுதாரர் ஆவார். இம்மனுன் எதிர்மனுதாரர் அசல் மனுவின் மனுதாரர் ஆவார். அசல் மனுவானது சுவாதீனப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரரால், மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) மனுதாரர் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரர்/எதிர்மனுதாரர் பக்கம் உள்ள வழக்கை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்கள் மனுதாரர் தரப்பு கட்சியை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் என்றும், எனவே, அசல் மனுவின் எதிர்மனுதாரர் தரப்பு ஆவணங்களாக ஏற்று குறியீடு செய்ய வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது.

9) மனு மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்கையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிப்பதினாலேயே, மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டதாக கருத முடியாது. மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நிரூபிக்கும் பொறுப்பு மனுதாரரையே சார்ந்தது ஆகும். இந்த ஆவணங்கள் தற்போது மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் ஆவணங்களை குறியீடு செய்யும் போது, எதிர்மனுதாரர் தனது தரப்பு ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ளலாம் என்றும், மேற்படி ஆட்சேபணைகளை நீதிமன்றம் பரிசீலனை செய்து, அதனடிப்படையில் மேற்படி ஆவணங்களின் ஏற்புடைமையை முடிவு செய்து கொள்ள முடியும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதாலும், ஒருவேளை அசல் மனுவினை தீர்மானிப்பதற்கு மேற்படி ஆவணங்கள் உதவ வாய்ப்பு இருந்தாலும், இருக்கலாம்

என்பதை கருத்தில் கொண்டு இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடலாம் என முடிவு செய்துகிறது.

10) தற்போது மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் சாட்சியத்தன்மையை ஆராய்வது ஏற்புடையதாக இருக்காது. இவ்வழக்கிற்கு மேற்படி ஆவணங்கள் அவசியமானதா இல்லையா என்பதை வழக்கின் இறுதி கட்டத்தில் தீர்மானித்துக் கொள்ளலாம் என்பதாலும், குறுக்கு விசாரணையின் போது மேற்படி ஆவணங்கள் குறித்து சாட்சியிடம் கேள்விகள் எழுப்பி தெளிவு பெற எதிர்மனுதாரருக்கு வாய்ப்பு உள்ளதாலும், நீதியின்பால் நலன் கருதி வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.08.21 18:05:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.08.21 18:05:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

Order uploaded in E-Court on 21.08.2025

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.4/2025 அதன்</u>**
**<u>ஆர்.எல்.டி.ஓ.பி.எண்.3/2023</u>**

சீரான / வரைவு உத்தரவு
21.08.2025.